**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 931/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | இந்துமதி |
| Father Name | : | அண்ணாதுரை |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 30 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 14.10.2023 ஆம் தேதியன்று எனது குழந்தைகளை பள்ளியில் விட்டுவிட்டு வந்தபோது எனது மகள் தீர்த்தா அவரது அப்பாவை வெளியில் கூட்டிட்டு போக கேட்பதாக கூறினார். எனது மகனும் போகவேண்டும் என்று கூறினார். பின்னர் அவர்கள் எனது போனில் இருந்து அவரது அப்பாவிற்கு போன் செய்து வரச்சொன்னார்கள். பின்னர் நான் எனது குழந்கைளிடம் கடைக்கு மட்டும் போய்விட்டு வரும்படி கூறினேன். பின்னர் அவரது அப்பா அவர்களை கூட்டிச்சென்றார்கள். இரண்டு மணிநேரம் ஆகியும் அவர்கள் வரவில்லை. நான் போன் செய்தும் எனது போனை எடுக்கவில்லை. பின்னர் எனது மகள் போன் செய்து அவர்களது பெரியப்பா வீட்டில் இருப்பதாக கூறினார். நான் அதற்கு எங்கும் செல்லக்கூடாது கடைக்குச்சென்றுவிட்டு வீட்டிற்கு வரசொல்லித்தான சொன்னேன் என்று கேட்டேன். அதற்கு எனது மகள் அப்பாதான் அழைத்துச்சென்றதாக கூறினார். பின்னர் மாலை 4–5 மணிக்கு வந்தார்கள். நான் எனது வீட்டிற்கு அருகில் உள்ள பக்கத்து வீட்டில் அமர்ந்திருந்தேன். பின்னர் எனது குழந்தைகள் வந்தார்கள். நான் என்ன சொன்னேன் நீங்கள் என்ன செஞ்சிருக்கீங்க என்று என் குழந்தைகளை கேட்டேன். அப்போது என் குழந்தைகள் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது அருகில் கிடந்த குச்சியை எடுத்து அடிக்க சென்றபோது எனது கணவர் என் முன்னாடியே

எனது மகனை அடிக்கிறாயா என்று சொல்லி அவரது கையால் என் கன்னத்தில் அடித்துவிட்டார். என்னை எதற்கு அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு கேட்டபோது பக்கத்தில் இருப்பவர்கள் வந்து என்னையும் எனது கணவரையும் தடுத்தார்கள். பின்னர் எனது கணவருக்கும் அருகில் இருந்தார்கள் அறிவுரை சொன்னார்கள். பின்னர் நான் எனது கணவரிடம் எனது குழந்தைகளை அடிக்க எனக்கு உரிமை இல்லையா என்று கேட்டேன். முதல் மனைவியின் குழந்தைகளைத்தான ரொம்ப கவனிப்பீங்க, இப்ப என்ன புதுசா என்று கேட்டபோது எனது கணவர் என்னை பார்த்து தேவடியா முண்டை என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்னர் என்னை எனது தம்பி காங்கேயம் மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்காக அழைத்துவந்தார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக பரணி மருத்துவமனை ஈரோடு சென்று சிகிச்சையில் இருந்தேன். பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் இருந்து வந்த போலீசார் புகார் வாக்குமூலம் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூல புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த வாக்குமூல புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் திருமணத்திற்கு முன்பு ஜப்பானில் கம்பியூட்டர் இன்ஜினியராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு முதல் திருமணம் நடைபெற்று விவாகரத்து பெற்றுவிட்டார் என்றால் சரிதான். என்னை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். என்னை திருமணம் செய்துகொண்ட பிறகு என்னை ஜப்பானுக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரிதான். அங்கு எத்தனை மாதங்கள் இருந்தோம் என்றால் 9 மாதம் இருந்தோம். பின்னர் நான் கருவுற்றிருந்த காரணத்தினால் பிரசவத்திற்காக இந்தியாவிற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான். எனக்கு முதல் பெண் குழந்தை 2015 ல் பிறந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு என்னை ஜப்பான் அழைத்துச்சென்றார். இரண்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பாக இந்தியா வந்துவிட்டோம். ஜப்பான் செல்வதற்கு முன்பாக இருவரும் சென்னையில் இருந்து வந்தோம் என்றால் சரிதான். சென்னையில் இருந்த போதும் , ஜப்பானில் இருந்தபோதும் எங்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. கருத்து

வேறுபாடு இருந்தது. திருமணத்திற்கு பின்னிட்டு கருத்து வேறுபாடு இருந்ததாக நான் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இரண்டாவது குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டு நானும், எனது கணவரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டோம் என்றால் சரிதான். கருத்து வேறுபாடு காரணமாக என் கணவரிடம் விவாகரத்து கோரி காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில் HMOP.NO.32/2022 யை கடந்த 18.04.2022 ஆம் தேதி தாக்கல் செய்து அதில் நான் விவாகரத்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனது கணவர் மீது ஜீவனம்சம் வேண்டி குற்றவியல் நீதிமன்றம் காங்யேத்தில் MC 15/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எனது கணவர் ஜப்பானில் வேலையில் இருந்தார். எனது குடும்பம் வசதி குறைவான குடும்பம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு எனது பெயரில் நத்தக்கடையூர் வேலன் நகரில் ஒரு இடம் கிரையம் உண்டு என்றால் சரிதான். சென்னையில் உள்ள என் கணவர் பெயரில் உள்ள இடத்தின் பத்திரம் என் வசம் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகளும் தாக்கல் செய்தபின்னர்தான் சம்பவம் நடைபெற்றதாக புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் எந்த இடத்தில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இடது கன்னத்தில் அடித்ததாக கூறியுள்ள நிலையில் இடது கன்னத்தில் வலி இருப்பதாக கூறவில்லை என்றால் சரிதான். சம்பவமானது இரண்டு குழந்தைகளுக்கும் முன்னிலையில்தான் நடந்தது என்றால் சரிதான். அதனை புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அவர்கள் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. சம்பவத்தின் போது எனது பெள்றோர், சகோதரர் எனது வீட்டில் இருந்தார்கள் என்றால் அவர்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள். இச்சம்பவம் பற்றி வழக்கறிஞரிடம் உடனடியாக கூறினேன் என்றால் சரிதான். அவர் காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்க சொல்லி சொன்னார் என்றால் சரிதான். நான் சம்பவ தேதியில் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு வந்த போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது தம்பி சம்பவத்தன்று வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் போலீசார் அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

சரிதான். அதனால்தான் நான் ஈரோடு தனியார் மருத்துவமனையில் சேர்ந்து அங்கிருந்து காவல் நிலையத்திற்கு என்னை தாக்கியதாக தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் வெள்ளகோவில் காவல் துறையினர் பெற்ற புகார் வாக்குமூலத்தில் தவறான சங்கதிகள் எழுதப்பட்டு அது அடிப்பட்டது எனும்போது என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 யில் அடிக்கப்பட்டதான சங்கதிகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். காங்கேயம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்தபோது என் கணவர் என்னை தாக்கியதாக கூறவில்லை என்றால் சரியல்ல. அடையாளம் தெரிந்த நபர் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார் வாக்மூலத்தில் எனது கணவர் வயிற்றில் எட்டி உதைத்ததாக கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது வயிற்றில் எட்டி உதைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 14.10.2023 ஆம் தேதி போலீசை நான் நேரில் சந்திக்கவில்லை என்றால் சரிதான். விஜயகுமார், கண்ணன் ஆகியோர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். அவர்கள் எதிரிக்கு தொடர்பு இல்லாத நபர்கள். சம்பவ தேதிக்கு பின்னாடி எனது கணவர் ஜப்பானிற்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மீது முதல் தகவல் அறிக்கையும், குற்ற வழக்கும் நிலுவையில் இருப்பதால்தான் ஜப்பானுக்கு செல்ல முடியவில்லை என்றால் சரிதான். குழந்தைகளுக்கு அவரது தகப்பனார் மீது நல்ல பாசம் உள்ளது என்றால் எனது மகனுக்கு நல்ல பாசம் உண்டு. அதனால் நாங்கள் பிரிந்துவிட்ட காலத்திலும், எனது குழந்தைகளை பார்க்க வருவார் என்றால் வருவார் ஆனால் 4 மாதத்திற்கு ஒருமுறை வருவார். எனது கணவரின் அண்ணா வீட்டிற்கு குழந்தைகளை அழைத்துச்செல்ல கூடாது என்பது எனது தனிப்பட்ட விருப்பம் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று அழைத்துச்சென்றதால் எனது கணவர் மற்றும் குழந்தைகள் மீது வருத்தம் என்றால் நான் கோவப்பட்டேன். கோவத்தின் வெளிப்படாக எனது குழந்தைகளை தொடப்பத்தின் குச்சியால் அடிக்க முற்பட்டேன் என்றால் சரிதான். அப்போது என் முன்பே குழந்தைகளை மிரட்டுவதும், அடிப்பதும் செய்கிறாய் என்று கேட்டார் என்றால் சரிதான். என் குழந்தையை அடிக்க எனக்கு உரிமை இல்லையா என்பது எனது தரப்பு வாதம் என்றால் சரிதான். எனது கணவர் குழந்தைகளை அடிக்ககூடாது என்றுதான் சொன்னார் என்றும், எனது கணவர் ஜப்பான் செல்லக்கூடாது என்பதற்காக என் கணவர் மீது பொய்யான புகார் கொடுத்து

அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் கொடுத்த புகாரில் உண்மை இல்லாததால் அதனை காவல் துறையினர் நிராகரித்துள்ள நிலையில் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் ஜப்பான் செல்லக்கூடாது என்பதற்காக வேண்டியும், என் கணவரை பழிவாங்க வேண்டியும், கொடுக்கப்பட்ட பொய் புகார் மற்றும் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விவாகரத்து வழக்கிற்கு முன்பாகவே காங்கேயம் மகளிர் காவல் நிலையத்தில் அவருடன் என்னை சேர்த்து வாழவைக்க கோரி என் கணவர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சிரதான். நான்தான் எனது கணவருடன் வாழ மறுத்தும், அவரை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தில் பெய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:56:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்